II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 196 of 2022**

Deposition of witness for the Plaintiff/PW 2
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 17.02.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Susila | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

எனக்கு 1999ம் ஆண்டு திருமணம் ஆனது. 1ம் வாதிக்கு எப்போது திருணம் ஆனது என்று வருடம் ஞாபகம் இல்லை. எங்களுக்கு திருமணம் ஆனதில் இருந்து சரோஜம்மாள் தனியாக தான் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. எங்கள் இருவரது வீட்டில் இருந்து வந்தார். நாங்களும் வாராவாரம் போய் பார்த்து வந்தோம். என் தந்தை 2000ம் வருடத்தில் இறந்துவிட்டார். என் தந்தை ஆசிரியர் ஆவார். எனது பெற்றோரின் பென்ஷன் தொகைகளை அவர்கள் தான் செலவு செய்து வந்தார்கள். நாங்கள் தான் அவரை பராமரித்து வந்தோம். பிரதிவாதிக்கு நானும் என் தாயாரும் சேர்ந்து தான் வாடகைக்குவிட்டோம். வாடகையை கடந்த 10 வருடமாக பிரதிவாதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். சரோஜம்மாள் தான் பிரதிவாதியாகிய என் மீது குடியிருக்க கொடுத்தார் என்றால் சரிதான். சரோஜம்மாளின் வீட்டிற்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் ஒரே கதவு எண் என்றால் சரிதான். நானும் 1ம் வாதியும் தனித்தனியாக வேலையில் இருந்ததால் எங்களுடைய தாயாரை வாராவாரம் வந்து நாங்கள் தான் பராமரித்து வந்தோம். கடந்த 10 ஆண்டுகளில் என் தாயாரின் பெயரில்

உள்ள வங்கி கணக்கில் இருந்து நாங்கள் பணம் எதுவும் எடுத்ததில்லை. அவர் இறந்த பிறகு தான் வங்கி கணக்கை முடித்தோம். கடந்த 10 ஆண்டுகளில் நாங்கள் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதில்லை என்றால் சரியல்ல. என் தாயாரின் காசோலைகளில் பிரதிவாதி திருத்தம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. திருத்தப்பட்ட காசோலையை வங்கியில் செலுத்த முடியுமா என்றால் என் தாயார் முன்பாக ஒரு தொகையை எண்ணில் மட்டும் எழுதி விட்டு வங்கிக்கு சென்று அதிக தொகையை குறிப்பிட்டு பிரதிவாதி பணம் எடுத்துள்ளார் என்று என் தாயார் சொல்லி எனக்கு தெரியும். வங்கி மேலாளரிடம் இது குறித்து புகார் கொடுத்தோம் என்றால் இல்லை. 16.12.2019 அன்று பத்திரம் பதிவின் போது பிரதிவாதியின் மனைவி வந்தாரா என்றால் பத்திரம் பதிவு செய்ததே எனக்கு தெரியாது. விடுதலை பத்திரத்திற்காக சரோஜம்மாவிற்கு பிரதிவாதி ரூ.2 லட்சம் கொடுத்தார் என்றால் பின்னிட்டு பத்திரத்தை வாங்கி பார்த்த போது வாங்கி பார்த்த போது பத்திரத்தில் அவ்வாறு குறிப்பிடபட்டிருந்தது. பிரதிவாதி பணம் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. விடுதலை பத்திரத்தில் முதல் சாட்சி 1ம் வாதியின் உறவினர் என்றால் சரிதான். 2வது சாட்சி அதே ஊரை சார்ந்தவர் என்றால் சரிதான். வழக்கு சொத்து தொடர்பாக சார்பதிவாளரிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் புகார் கொடுத்தேன்என்றும் பத்திரம் உண்மையானது என்பதால் சார்பதிவாளர் அதை ரத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. விடுதலை பத்திரம் எழுதும் போது என் தாயாருக்கு வயது முதிர்வு இருந்தது. ஆனால் உடல்நிலை நன்றாக இருந்தது என்றால் சரிதான்.

(இந்நிலையில் பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கினங்க குறுக்கு விசாரணைக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)